*கவனிக்க.- சிங்களம் மற்றும் ஆங்கில மொழிப் பிரதிகள் தனித்தனியாக பிரசுரிக்கப்படுகின்றன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1798/13 - 2013 පෙබරවාරි මස 18 වැනි සඳුදා - 2013.02.18

*1798/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2013, பெப்புருவரி மாதம 06 ஆந் திகதிய 1796/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலிலுள்ள அட்டவணையை நீக்கி, அதற்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பதிலீடு செய்வதன் மூலம் அவ்வறிவித்தல் இத்தால் திருத்தப்படுகின்றதென்பது அறிவிக்கப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2013, பெப்புருவரி 18.*

**அட்டவணை**

*(1) அவ்வறிவித்தலிலுள்ள நிதி, திட்டமிடல் அமைச்சர் (இல.02) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-*

*(அ) அதன் நிரல் II இலுள்ள 09, 21, 24 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும் :-*

*“09. வர்த்தக, முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்*
*21. வியாபார முகாமைத்துவ, மேற்பார்வைத் திணைக்களம்*
*24. மிலோதா நிறுவனம்” ;*

*(ஆ) அதன் நிரல் II இலுள்ள 47 ஆவது விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-*

*“48. தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்”;*


1A- PG 1567-835(02/ 2013)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) அவ்வறிவித்தலிலுள்ள கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சர் (இல.22) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 11, 12 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன்மூலமும்:-

"11. 1949 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஈட்டுச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின்கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அனுமதித்தல்.
12. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும்
13. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" ;

(3) அவ்வறிவித்தலிலுள்ள மின்வலு, எரிசக்தி அமைச்சர் (இல.23) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 9 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலமும் ;

(ஆ) அதன் நிரல் I இலுள்ள 10, 11 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடுசெய்வதன்மூலமும்:-

"9. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும்
10. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை" ;

(இ) அதன் நிரல் II இலுள்ள 1, 3, 7 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

(ஈ) அதன் நிரல் II இலுள்ள 2, 4, 5, 6 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடுசெய்வதன்மூலமும்:-

"1. இலங்கை மின்சார சபை
2. இலங்கை மின்சார கம்பனி
3. வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி
4. வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனி ";

(உ) அதன் நிரல் III இலுள்ள "1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபைச் சட்டம்" மற்றும் "2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைச் சட்டம்" என்ற விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

(4) அவ்வறிவித்தலிலுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் (இல.26) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் I, II, III ஆகிய நிரல்களில் காணப்படும் விடயங்களை நீக்கி, அதற்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும்:-

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. மஹிந்த சிந்தனை தொலைநோக்கு மற்றும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப் படக்கூடிய வேறேதேனும் முழுதுமளாவிய தேசிய கொள்கை களின் அடிப்படையில் வறுமை ஒழிப்பு, கமநலசேவை, சுற்றுலா ஆகியன தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்களின் கீழ்வரும் விடயங்களுடனும் | 1. திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் (2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் திகதி அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் பணிப்புறுத்தப்படும் ஒரு திகதியிலிருந்து)<br>2. கமநல அபிவிருத்தித் திணைக்களம் | * 2013ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டம்<br>* 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்<br>* 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உல்லாசப் பயணத்துறைச் சட்டம்<br>* 1985 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வறியோர் நிவாரணச் சட்டம் |

*நிரல் I*
*கடமைகளும் பணிகளும்*

தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தல்.

2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறை யினுள்ளும் வரவுசெலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்குதல்.

4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக் கட்டி அமைச்சின் செயற்பொறுப்பை நிறைவேற்று வதை உறுதிசெய்யத் தூண்டுதல் அளிக்கின்றவாறு நவீன முகாமைத்துவ, தொழில்நுட்ப நுட்பமுறைகளைக் கையாண்டு சகல முறைகளையும் நடவடிக்கைமுறை களையும் மறுசீரமைத்தல்.

5. கிராமிய வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான உபாய முறை களைச் செயற்படுத்தல்.

6. கிராமிய, பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளையும் உபாயமுறைகளையும் வகுத்தமைத் தல்.

7. கிராமிய, தோட்டத்துறைகளின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி.

8. சகல பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் (மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கலாக) செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும்.

*நிரல் II*
*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்*

3. இலங்கைச் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம்
4. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
5. இலங்கை மாநாட்டுப் பணியகம்
6. இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம்
7. கிராமிய அபிவிருத்தி பயிற்சி, ஆராய்ச்சி நிறுவகம்.
8. சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்
9. மலைநாட்டு கிராமிய புனர்வாழ்பளிப்புத் திணைக்களம்
10. இலங்கை சமுர்த்தி அதிகார சபை
11. தென்பகுதி அபிவிருத்தி அதிகாரசபையும் அதன் இணை நிறுவனங்களும்
12. மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபை

*நிரல் III*
*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

* 1995 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க இலங்கை சமுர்த்தி அதிகார சபைச் சட்டம்
* 1996 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தென் பகுதி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்
* 2005 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்
* தற்போது செயல் வலுவிலுள்ளவை யும் வேறேதேனும் அமைச்சொன் றின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாத வையும் இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டவாக்கங்களும்”

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும்<br>அரச கூட்டுத்தாபனங்களும்<br>நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட<br>வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 9. "திவிநெகும" செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும். (2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படும் திகதி அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டளையொன்றின் மூலம் பணிப் புறுத்தப்படும் ஒரு திகதியிலிருந்து) | | |
| 10. வயல்களின் உடைமை. | | |
| 11. கமக்காரர்களின் சமூகப் பாதுகாப்பு நன்மைகள் திட்டம் | | |
| 12. பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் செயற்படுத்துகை. | | |
| 13. சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத் தியும் தராதரங்களை வகுத்தலும். | | |
| 14. சுற்றுலாத்துறை முகவராண்மை களின் பதிவு | | |
| 15. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும் | | |
| 16. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறு வனங்களின் மேற்பார்வை; | | |

(5) அவ்வறிவித்தலிலுள்ள சுற்றாடல் அமைச்சர் (இல.34) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பை "(34) சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்" என்றும் ;

(ஆ) அதன் நிரல் I இலுள்ள 11, 12 ஆகிய விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்:-

"11. புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி
12. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும்
13. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை";

(இ) அதன் நிரல் II இலுள்ள 9 ஆவது விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"10. இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை" ;

(ஈ) அதன் நிரல் III இலுள்ள "இலங்கை இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டம்" என்ற விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைச் சட்டம்" ;

(6) அவ்வறிவித்தலிலுள்ள கல்வி அமைச்சர் (இல.37) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 7, 8 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

(ஆ) அதன் நிரல் II இலுள்ள 5 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலமும்;

(இ) அதன் நிரல் III இலுள்ள "1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணப்படுத்தும் சேவைகள் சபைச் சட்டம்" என்ற விடயத்தை நீக்குவதன்மூலமும் ;

(7) அவ்வறிவித்தலிலுள்ள கமத்தொழில் அமைச்சர் (இல.43) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இலுள்ள 7 ஆவது விடயத்தையடுத்து, பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும்:-

"8. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
9. கலம்பு கொமர்ஷல் ∴பர்டிலைசர் கம்பனி
10. தேசிய உரச் செயலகம்
11. வரையறுக்கப்பட்ட ஜனதா ∴பர்டிலைசர் என்ரபிரைசஸ்" ;

(ஆ) அதன் நிரல் III இலுள்ள "1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்கான பேரவைச் சட்டம்" என்ற விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்" ;

(8) அவ்வறிவித்தலிலுள்ள சிறு ஏற்றுமதி பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சர் (இல.50) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இலுள்ள 3 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலமும் ;
(ஆ) அதன் நிரல் III இலுள்ள "கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் (1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க)" என்பதை நீக்குவதன்மூலமும் ;

(9) அவ்வறிவித்தலிலுள்ள கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர் (இல.56) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பை "56. வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்" என்றும் ;

(ஆ) அதன் நிரல் I இலுள்ள 5, 6 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

(இ) அதன் நிரல் II இலுள்ள சகல விடயங்களையும் நீக்கி, பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும்:-

"1. வனசீவராசிகள் பேணல் திணைக்களம் ;
2. வனசீவராசிகள் நம்பிக்கைப்பொறுப்பு" ;

(ஈ) அதன் நிரல் III இலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

"2000 ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்" ;
"1988 ஆம் ஆண்டின் 68ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்";

(10) அவ்வறிவித்தலிலுள்ள அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் (இல.60) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் II இலுள்ள 2, 4, 5, 6 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலமும் ;

(11) அவ்வறிவித்தலிலுள்ள தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சர் (இல.62) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பை "(62) தொழில்நுட்ப, ஆராய்ச்சி, அணுசக்தி அமைச்சர்" என்றும்,

(ஆ) அதன் நிரல் II இலுள்ள 11 ஆவது விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"12. அணுசக்தி அதிகாரசபை" ;

(இ) அதன் நிரல் II இலுள்ள 14 ஆவது விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

"15. பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனி லிமிட்டெட்" ;

(ஈ) அதன் நிரல் III இலுள்ள "1984 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டம்" என்ற விடயத்தையடுத்து, பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"1969 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகாரசபைச் சட்டம்" ;

(12) அவ்வறிவித்தலிலுள்ள வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சர் (இல.63) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் நிரல் I இலுள்ள 9 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலமும் ;

(13) அவ்வறிவித்தலிலுள்ள "அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர்" (இல.64) என்ற தலைப்பின் I , II, III ஆகிய நிரல்களையடுத்து, பின்வரும் புதிய தலைப்புகளைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(65) **சீனிக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்**

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 1. மஹிந்த சிந்தனை தொலை நோக்கு மற்றும் அரசாங்கத்தினால் செயற் படுத்தப்படக்கூடிய வேறேதேனும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் சீனிக் கைத்தொழில் அபிவிருத்தியுடனும் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புடைய கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத் திட்டங்களையும் வகுத்தமைத்தல்.<br><br>2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத் திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும்.<br><br>3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்குதல். | 1. கந்தளாய் சீனிக் கம்பனி<br>2. ஹிங்குரானை சீனிக் கைத்தொழில் கம்பனி லிமிட்டெட்<br>3. இலங்கைச் சீனி (தனியார்) கம்பனி லிமிட்டெட்<br>4. கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி<br>5. கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் | * 1981 ஆம் ஆண்டின் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி நிறுவகச் சட்டம்<br><br>* தற்போது செயல் வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சொன்றின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும், இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டவாக்கங்களும். |

| நிரல் I<br>கடமைகளும் பணிகளும் | நிரல் II<br>திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் | நிரல் III<br>நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
|---|---|---|
| 4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி அமைச்சின் செயற்பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதிசெய்யத் தூண்டுதலளிக்கின்ற வாறு நவீன முகாமைத்துவ, தொழில் நுட்ப நுட்பமுறைகளைக் கையாண்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல். | | |
| 5. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின்கீழ் பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்ட பெல்வத்த ஷுகர் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட், செவனகல ஷுகர் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கு புத்துயிரளித்தல் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் ஆற்றப்படும் செயற்பாடுகளை நெறிப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும். | | |
| 6. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களை வணிகரீதியில் பயனுறுதிவாய்ந்த தொழில் முயற்சிகளாக மாற்றியமைத்தல். | | |
| 7. தொழில்முயற்சிகளின் மேற்பார்வையும் ஒருங்கிணைப்பும் வழிகாட்டலும் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களை அறிமுகப்படுத்தலும். | | |
| 8. சீனிக் கைத்தொழில் சார்ந்த அரச வளங்களின் முகாமையும் பேணுகையும். | | |
| 9. நிறுவனங்களின் நிதி ஆற்றலையும் வணிக இயலாற்றலையும் மேம்படுத்துதல். | | |
| 10. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள சகல நிறுவனங்களுக்கும் உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும். | | |
| 11. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை. | | |

*(66)* **முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்**

| *நிரல் I* *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மஹிந்த சிந்தனை தொலைநோக்கு மற்றும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படக்கூடிய வேறேதேனும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் முதலீட்டு ஊக்குவிப்புடனும் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புடைய கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல். | 1. இலங்கை முதலீட்டுச் சபை | * 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பெரும்பாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் (முதலீட்டு சபைச் சட்டம்) |
| 2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவுசெலவுத் திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும். | | * 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம் |
| 3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்குதல். | | * தற்போது செயல் வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சொன்றின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும், இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டவாக்கங்களும். |
| 4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி அமைச்சின் செயற்பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்யத் தூண்டுதலளிக்கின்றவாறு நவீன முகாமைத்துவ, தொழில்நுட்ப நுட்பமுறைகளைக் கையாண்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல். | | |
| 5. வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஊக்குவிப்பு. | | |
| 6. தனியார்துறை முதலீடுகளின் ஊக்குவிப்பு. | | |
| 7. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் பொதுத் | | |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |

திறைசேரியின் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள பின்வரும் நிறுவனங்களின் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்குப் புத்துயிரளித்தல் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள தகுதிவாய்ந்த அதிகாரிகளினால் ஆற்றப்படும் செயற்பாடுகளை நெறிப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

(i) பதுளையில் அமைந்துள்ள ஆதனங்கள் - கலம்பு கொமர்ஷல் கம்பனி
(ii) சினோரெக்ஸ் (லங்கா) லிமிட்டெட்
(iii) ஜெக லங்கா லிமிட்டெட்
(iv) பிளைமத் இன்டஸ்ரீஸ் (பிரைவற்) லிமிட்டெட
(v) கொஸ்மோஸ் மெக்கி இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
(vi) காபூல் லேஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(vii) இன்டர்டிரேட் லங்கா (பிரைவற்) லிமிட்டெட்
(viii) சீதா பாஷன்ஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(ix) டி.சி.அப்பரல் (பிரைவற்) லிமிட்டெட்
(x) நீடில் கிறாப்ட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(xi) ஹைபாஷன் கார்மன்ட் (பிரைவற்) லிமிட்டெட்
(xii) கொலின்ஸ் கார்மன்ட் (பிரைவற்) லிமிட்டெட்
(xiii) றுஹுணு புதா அபரல்ஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(xiv) சன்ஜய கார்மன்ட் (பிரைவற்) லிமிட்டெட்
(xv) மக்பா அப்பரல் (பிரைவற்) லிமிட்டெட்
(xvi) யொஹிதா அசோசியேட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(xvii) டைனமிக் குளோதிங் (பிரைவற்) லிமிட்டெட்
(xviii) 609 பொலிமர்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட்
(xix) கொஸ்கோ பொலிமர் லங்கா (பிரைவற்) லிமிட்டெட்

| *நிரல் I* <br> *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* <br> *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* <br> *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| (xx) கிறேட் வோல் திரெட் மெனுபெக்சரிங் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxi) அடம்ஜி எக்ஸ்ட்ராக்ஷன்ஸ் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxii) டாட்டா ∴புட் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxiii) ரென்டன் லங்கா (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxiv) நிக்கான் லங்கா (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxv) கொம்பொசிற் ரவர் சொலியூசன்ஸ் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxvi) ஹெல்த் ∴ புட் புரொடக்ட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxvii) ஸ்ரீ சிராக் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxviii) றோயல் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட் <br> (xxix) கொன்ரினென்ரல் வனஸ்பதி (பிரைவற்) லிமிட்டெட்" ; | | |
| 8. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும். | | |
| 9. நிரல் II இல் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை | | |

(67) **தாவரவியல் பூங்காக்கள், பொது பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சர்**

| *நிரல் I* <br> *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* <br> *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* <br> *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மஹிந்த சிந்தனை தொலைநோக்கு மற்றும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படக்கூடிய வேறே தேனும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் தாவரவியல் பூங்காக்களின் பேணுகை, பராமரிப்பு, அபிவிருத்தி மற்றும் பொதுப் பொழுதுபோக்கு அலுவல்களுடனும் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயங்களுடனும் தொடர்புடைய கொள்கைகளையும் நிகழ்ச்சித் | 1. தேசிய விலங்கின காட்சிச்சாலை திணைக்களம் <br> 2. தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் <br> 3. இலங்கை கைவினைப் பொருள் கைத் தொழில் சபை (லக்சல) | * *1982 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிச்சாலைச் சட்டம்* <br> * *1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தாவரவியல் பூங்கா கட்டளைச் சட்டம்.* <br> * தற்போது செயல் வலுவிலுள்ள வையும் வேறேதேனும் அமைச் சொன்றின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவை யும், இங்கு I ஆம், II ஆம் நிரல்களில் குறித் துரைக் கப் பட்டவையுமான |

| *நிரல் I*<br>*கடமைகளும் பணிகளும்* | *நிரல் II*<br>*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III*<br>*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல். | | விடயங்கள் சார்ந்த மற்றெல்லாச் சட்டவாக்கங்களும்.” |
| 2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரி களுடன் உடன்பட்ட கால வரையறை யினுள்ளும் வரவு செலவுத்திட்டத்தில் அடங்கப்பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும். | | |
| 3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேகபூர்வமாகவும் வழங்குதல். | | |
| 4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக்கட்டி, அமைச்சின் செயற்பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்யத் தூண்டுதல் அளிக்கின்ற வாறு நவீன முகாமைத்துவ, தொழில்நுட்ப நுட்ப முறைகளைக் கையாண்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல். | | |
| 5. இலங்கைத் தாவரங்களின் பேணுகையும், தாவரவியல் பூங்காக்களின் பராமரிப்பும், மலர்ச்செய்கைக் கைத்தொழிலுக்கு உதவுதலும். | | |
| 6. மிருகங்கள், பறவைகள், ஊர்வன முதலியவற்றை ஒன்றுதிரட்டி காட்சிப் படுத்துவதன் மூலம் பொதுமக்களுக்கு கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல். | | |
| 7. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் உரித்தாக்கப்பட்ட வேறெல்லா விடயங்களும். | | |
| 8. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை. | | |

*(68)* **கல்விச் சேவைகள் அமைச்சர்**

| *நிரல் I* *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 1. மஹிந்த சிந்தனை தொலைநோக்கு மற்றும் அரசாங்கத்தினால் செயற்படுத்தப் படக்கூடிய வேறேதேனும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில் பாடசாலைக் கல்விச்சேவைகளை வழங்குதல் சார்ந்த விடயங்கள் தொடர் பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தல். | 1. தேசிய நூலக, ஆவணமாக்கல் சேவைகள் சபை | * 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணப் படுத்தும் சேவைகள் சபைச் சட்டம். |
| 2. குறித்த தேசிய நோக்கங்களை எய்தும் பொருட்டு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் உடன்பட்ட கால வரையறையினுள்ளும் வரவு செலவுத் திட்டத்தில் அடங்கப் பெற்ற வளங்களை விஞ்சாதவாறும் சொல்லப்பட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும். | | * தற்போது செயல் வலுவிலுள்ளவையும் வேறேதேனும் அமைச்சொன்றின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப் படாதவையும், இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப் பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும். |
| 3. அமைச்சின் நோக்கெல்லையின் பாற்பட்ட பொதுச் சேவைகளை வினைத்திறனுடனும் மக்கள் சிநேக பூர்வமாகவும் வழங்குதல். | | |
| 4. வீண்விரயத்தையும் ஊழலையும் ஒழித்துக் கட்டி அமைச்சின் செயற் பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதி செய்யத் தூண்டுதலளிக்கின்றவாறு நவீன முகாமைத்துவ, தொழில்நுட்ப நுட்பமுறைகளைக் கையாண்டு சகல முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மறுசீரமைத்தல். | | |
| 5. இலவச பாடநூல்கள், சீருடைகள், பாதணிகள், மேசைகள், கதிரைகள், பகற்போசனம் முதலியவற்றை வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் செயற்படுத்தலும் நெறிப்படுத்தலும். | | |
| 6. பாடசாலை நூலகங்களின் மேம்படுத்துகையும் அபிவிருத்தியும். | | |

| *நிரல் I* <br> *கடமைகளும் பணிகளும்* | *நிரல் II* <br> *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நிரல் III* <br> *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
|---|---|---|
| 7. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மற்றெல்லா விடயங்களும். | | |
| 8. II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள நிறுவனங்களின் மேற்பார்வை. | | |

*03-328*